5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

(ஏ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994-ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*